பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 12 2025 SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் நலனுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க சட்டம் கிராமப்புற மேம்பாட்டை உறுதி செய்யும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. எல்லை பாதுகாப்புப்படை வீரர்களுக்கான பணியிடங்களில் முன்னாள் அக்னி வீரர்களுக்கான ஒதுக்கீடு 10 சதவீதத்தில் இருந்து, 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

4. மகாராஷ்ட்ரா உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பெரும்பாலான இடங்களில் பிஜேபி தலைமையிலான கூட்டணி முன்னிலை பெற்றுள்ளது.

5. இந்தியா — இலங்கை இடையேயான முதலாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் சற்றுமுன் தொடங்கியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>>

விவசாயிகளின் நலனுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தின் Namrup-ல் உரத் தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டுமானப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் விவசாயிகள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக விவசாயிகள் நலனுக்கான திட்டங்களை தமது அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கு தடையின்றி உரம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதனை கருத்தில்கொண்டு உர உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் இதுவரை 4 லட்சம் கோடி ரூபாய் அவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு நேரடியாக விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் நலனுக்காக நடப்பாண்டில் மட்டும் **35** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க சட்டம் கிராமப்புற மேம்பாட்டை உறுதி செய்யும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் அடுத்தக்கட்டமாக இது கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், **100** நாட்களுக்கு பதிலாக **125** நாட்கள் வேலை உத்தரவாதம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊதியம் தாமதமாக வழங்கப்பட்டால், கூடுதல் தொகை வழங்கவும் இதில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதற்காக நடப்பாண்டில் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 282 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, இதுகுறித்து தவறான தகவல்களை எதிர்க்கட்சிகள் பரப்புவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>>

எல்லை பாதுகாப்புப்படை வீரர்களுக்கான பணியிடங்களில் முன்னாள் அக்னி வீரர்களுக்கான ஒதுக்கீடு 10 சதவீதத்தில் இருந்து, 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிக்கையை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

உடல் தகுதி தேர்விலிருந்தும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

அஸ்ஸாமில் ரயில் மோதியதில் யானைகள் உயிரிழந்த சம்பவம் குறித்து மத்திய அரசு அறிக்கை கோரியுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில்வே வழிடத்தடம் அருகே யானைகள் செல்வதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, ரயில்வேத்துறை மாநில அரசுகளோடு ஒருங்கிணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு புபேந்தர் யாதவ் கூறினார்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ரா உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

பெரும்பாலான இடங்களில் பிஜேபி தலைமையிலான கூட்டணி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளது.

223 அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில், 200-க்கும் மேற்பட்ட இடங்களில் பிஜேபி முன்னிலை வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் பிஜேபி கூட்டணிக்கு கிடைத்த வெற்றிக்கு, தமது அரசு செயல்படுத்திய வளர்ச்சித் திட்டப்பணிகளே காரணம் என்று அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், வளர்ச்சியை மட்டுமே முன்நிறுத்தி இந்த தேர்தலை பிஜேபி கூட்டணி எதிர்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>>

நாலந்தா கலாச்சார திருவிழாவை பீகார் மாநில ஆளுநர் திரு ஆரிஃப் முகமதுகான் இன்று தொடங்கிவைத்தார்.

**Rajgir-**ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஷி தரூருடன் இணைந்து அவர் இந்த விழாவை தொடங்கிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பீகார் ஆளுநர், இதுபோன்ற விழாக்களில் பங்கேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் மாவட்டந்தோறும் கூட்டுறவு வங்கி ஒன்றை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் இளையோர் கூட்டுறவு மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் உத்தரப்பிரதேசத்தில் கூட்டுறவு வங்கிகள் வலுப்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதன் காரணமாக 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு கடன் வழங்குவதில் இந்த வங்கிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐந்து மாவட்ட கூட்டுறவு வங்கிகள் தற்போது லாபத்துடன் இயங்கி வருவதாகவும் திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<>>>>>

குஜராத்தில் கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு பூபேந்தர் பாட்டீல் கூறியுள்ளார்.

இன்று அகமதாபாதில் கட்டுமானம் தொடர்பான மூன்று நாள் கண்காட்சியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் அகமதாபாதில் நடைபெறுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இது கட்டுமானத்துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் திரு பூபேந்தர் பாட்டீல் கூறினார்.

<<<<>>>>>

இமாச்சலப்பிரதேசத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று நடைபெற்றது.

சிம்லாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு **Sukhvinder Singh Sukhu** இதனை தொடங்கிவைத்தார்.

ஐந்து வயதுக்கு உட்பட்ட **6** லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுவதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>>

மகளிர் பாதுகாப்பிற்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், தில்லி மேம்பாட்டில் மகளிர் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மகளிருக்கு சம வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். **6** பேர் காயமடைந்தனர்.

குணா மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த கார் மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>>

தென்கொரியா — ரஷ்யா இடையேயான பேச்சுக்கள் இன்று மாஸ்கோவில் நடைபெற்றன.

வடகொரியாவின் அணு திட்டங்கள் மற்றும் மண்டல பாதுகாப்பு குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக ரஷ்ய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>>

நேபாளத்தில் நடைபெற்று வந்த சர்வதேச மரக்கண்காட்சி இன்று நிறைவடைந்தது.

இந்தியா, சீனா, மலேசியா உட்பட பத்து நாடுகளின் 250-க்கும் மேற்பட்ட அரங்குகள் இந்த கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

<<<<>>>>>

பிலிப்பைன்ஸில் சர்க்கரை இறக்குமதிக்கான தடை அடுத்த ஆண்டு இறுதிவரை நீட்டிக்கப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சர்க்கரை உற்பத்தியை கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிலிப்பைன்ஸ் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>>

ஆப்கானிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 44 பேர் காயமடைந்தனர்.

Baghlan மாகாணத்துக்கு உட்பட்ட Salang-ல் சென்று கொண்டிருந்தபோது பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டது.

அதிவேகமே இந்த விபத்திற்கு காரணம் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>>

பாகிஸ்தானில் ஊடகவியலாளர் Sohrab Barkat கைது செய்யப்பட்டிருப்பது குறித்து Amnesty அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்தியில், அரசுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்ததற்காக இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கு விவரங்களை தெரிவிக்காமலேயே **Sohrab Barkat** கைது செய்யப்பட்டிருப்பதாகவும், **Amnesty** அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

கேலோ இந்தியா மத்தியப்பிரதேச இளையோர் விளையாட்டுப் போகள் அடுத்த மாதம் **10**-ஆம் தேதி தொடங்கி **31**-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய மத்தியப்பிரதேச விளையாட்டுத்துறை அமைச்சர் திரு **Vishvas Sarang**, இதற்கான அனைத்து ஏற்பாட்டுப் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — இலங்கை இடையேயான முதலாவது மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்துவரும் இலங்கை **5** ஓவரில் **2** விக்கெட் இழப்பிற்கு **31**ரன் எடுத்துள்ளது.

---------------

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

**<<<<END>>>>>**